பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம். ஏ. எம். லிட்

மலர்: 15] சென்னை: கார்த்திகை 25உ (11—12—67) திங்கள் வெளியூர்: கார்த்திகை 26உ (12—12—67) செவ்வாய் [இதழ்: 149

கட்டாய இந்தி தளருகிறது!

கருநாடக அரசின் பணிவு

கருநாடக மாநிலத்தில், 1968 மார்ச்சு மாதத் தேர்வுகளில், இந்தி கட்டாயப் பாடமாக்கப்பட்டதை எதிர்த்து மாணவர்களும், பெற்றோர்களும், பத்திரிகைகளும் எதிர்ப்புக் குரல் எழுப்பியதைத் தொடர்ந்து, அரசு சட்டத்தைத் தளர்த்தியுள்ளது!

புதிய விதிகளின்படி, மாணவர்கள் தாய் மொழி அல்லது இந்தி ஏதாவதொன்றில் தேர்வு எழுதி அதில் 35 மதிப்பெண்கள் பெற்ருல் போதுமானது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

வரி விதிப்பதில் உச்சக் கட்டத்தை எட்டிவிட்டோம்!

இனி மேலும் வரி போட்டு மக்களை வாட்ட முடியாது

இந்த நிலையிலும் மத்திய உதவியைக் குறைப்பதேன்?

நகராட்சி நிர்வாகக் கருத்தரங்கில் அமைச்சர் முத்துச்சாமி வேதனை

சென்னை, டிச. 11 —

"கடந்த நான்கைந்து ஆண்டுகளாகக் குடிநீர் வழங்க ஒதுக்கப்பட்டுள்ள தொகையை, ஆண்டுதோறும் படிப்படியாக மத்திய அரசின் பொதுச் சுகாரத் துறை குறைத்துக்கொண்டே வருகிறது.

"இக்கருத்தரங்கின் விளைவாக நான் சார்ந்துள்ள மாநிலத்திற்கு மட்டுமல்லாமல், மற்ற எல்லா மாநிலங்களுக்குமே மத்திய அரசின் பொதுச் சுகாரத் துறை தனது நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்துகின்ற நிலை ஏற்படுமாஞல் நாட்டிலுள்ள எல்லா நகராட்சி மன்றங்களுமே மத்திய அரசுக்கு நன்றி செலுத்தும் என்பதில் ஐயமில்லை.

"தமிழகத்திலுள்ள 84 நகராட்சி மன்றங்கள், 4 நகரியங்கள் ஆகியவற்றிற்குக் குடிநீர் வழங்குதல், வடிகால் வசதி பற்றிய மூலதன வேலைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள செலவுத் தொகை ஓராண்டுக்கு ரூ. 90 இலட்சம்தான்; இது மிகக் குறைவான தொகையாகும்"

என்று, உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள், சென்னையில் நடைபெற்ற நகராட்சிகள் நிர்வாகம் தொடர்பான கருத்தரங்கில் உரை நிகழ்த்துகையில் குறிப்பிட்டார். அமைச்சர் தமது உரையில் மேலும் குறிப்பிட்டதாவது :—

"நகராட்சிகளின் வருமானங்களில் உயர்வு ஏற்பட்டிருப்பதைப் பற்றி யாரும் மறுப்பதற்கில்லை.

காலாகாலமாகப் போடப்பட்டு வரும் வீட்டு வரி—தொழில் வரி கால்நடை வரி—வாகன வரி போன்றவைகள், கடந்த பதினைந்து ஆண்டுகளில் பலமடங்கு உயர்ந்துள்ளன என்பது உண்மை.

தமிழகத்தில் பொழுதுபோக்கு வரியும், நகராட்சியின் உசிதப்படி அதன்மீது விதிக்கப்படுகின்ற கூடுதல் வரியும் கணிசமான வருவாயைத் தரக்கூடிய புதியதொரு நிதி ஆதாரமாகும்.

ஆனுல், வரிகள் மூலம் கிடைக்கும் இவ்வருமானமானது, சமுதாயத்தின் தேவைகள் வளர்ந்திருக்கின்ற அளவுக்குவளர வில்லை என்றே குறிப்பிட வேண்டும்,

நகராட்சி நிர்வாகம் சமாளிக்க வேண்டிய மிகப் பெரிய பிரச்சினை என்னவென்ருல், மேலும் அதிக நிதிகளை அவை திரட்ட வேண்டியுள்ளதே ஆகும்.

"நகராட்சிகள், கடன் பத்திரங்கள் வெளியிட்டு நிதி திரட்டலாமே" என்று சொல்லலாம்; ஆனுல், மூலதனம் முடக்கமாக உள்ள இன்றைய நிதி நிலையில் அப்படிப்பட்ட ஒரு செயலை, 'உறுதியான வருவாய் கிடைக்கக்கூடிய வழி' என்று கொள்ள முடியாது.

வரி விதிப்பதைப் பொறுத்த வரையில் நாம் உச்சவரம்பினை அடைந்துவிட்டோம் என்ற கருத்தினைப் பலர் கொண்டுள்ளனர்.

கூடுதலாக வரி விதிப்பது மிகவும் கடினமான ஒன்று. விதிக்கின்ற வரிகளை வசூல் செய்வது அவ்வளவு சுலபமாக முடியக்கூடியதல்ல என்பது மட்டுமல்லாமல், வரி போடுதலின் மூலம் மக்களிடையே செல்வாக்கினையும் வரி போடுபவர்கள் இழக்க நேரிடுகிறது!

ஆக, உடனடியாக வருவாயைப் பெருக்கித் தரக்கூடிய வழிவகை ஒன்றும் இல்லாத ஒரு நிலையே நம்முன் உள்ளது.

நகராட்சிகளின் வருவாயைப் பெருக்குகின்ற முறையில் ஆக்கபூர்வமான கருத்துக்களையும் வழிவகைகளையும் இக்கருத்தரங்கு அளிக்குமேயானுல் நான் மிகவும் நன்றியுடையவனுக இருப்பேன். நகராட்சி மன்றங்களின் நிர்வாகம் இக்கட்டான ஒரு நிலையினை அடைந்துள்ளது என்பதனை, நான் இக்கருத்தரங்கில் சுட்டிக்கட்ட விரும்புகிறேன்.

நகராட்சிகளின் நிதி ஆதாரங்கள் மிகவும் குறைவாக உள்ளன.

இப்படிப்பட்ட நிலையில் உள்ள நகராட்சிகள், தங்களுடைய பணிகளையும், பொறுப்புகளையும் நல்ல முறையில் நிறைவேற்றுவதென்பது இயலாத ஒன்ருகும்.

பொதுமக்கள் தங்களுடைய பொறுப்புக்களைத் தக்கமுறையில் அறிந்துள்ளார்கள்; தங்களுடைய சேவைகளைப் பற்றியும் அவர்கள் நாள்தோறும் வலியுறுத்திக்கொண்டே வருகிருர்கள்.

நம் முன்னுலுள்ள இந்த நிலையை எப்படிச் சமாளிப்பது? எப்படி மேன்மேலும் இத்துறையிலே முன்னேற்றம் காண முடியும்?—என்பது பற்றியெல்லாம் இத்துறையிலே ஆழ்ந்த அறிவும் அனுபவமும் பெற்ற நகராட்சி மன்ற நிர்வாகிகள் அனைவரும் ஒருசேர அமர்ந்து பரிசிலனை செய்ய வேண்டிய ஒரு கட்டத்தை நாம் நெருங்கியுள்ளோம்.

அதிகப்படியான நிதி ஆதாரங்களைக் கண்டுபிடித்துப் பொதுமக்களுக்கு மேலும் தரமான வசதிகளை அளிக்க நாம் தவறுவோமேயானுல்,நாம் இருந்து செயல்படுவதன் பயன்தான் என்ன என்ற வினு, கட்டாயம் எழும்!"

'சங்லி' மேலும் பிரசித்தமாகிறது!

வருகிற சனவரித் திங்களில் அனைத்திந்தியக் காங்கிரசு மாநாடு நடைபெற இருக்கும் இடமான 'சங்லி'யில் (மகாராட்டிரம்), மீண்டும் ஓர் போராட்டம் — வன்முறைச் சம்பவங்கள் நடைபெற்றிருக்கின்றன!

மைசூர்—மகாராட்டிர எல்லைப் பிரச்சினையையொட்டி உள்துறையமைச்சர் சவாண் அங்கு சென்றபோது, பெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடந்திருக்கிறது.

தடியடி, கண்ணீர்ப் புகை ஆகியவைகள் காரணமாகப் போலீசாரும், போராட்டத் தரப்பினருமாக — நூற்றுக் கணக்கானபேர் காயமுற்றிருக்கின்றனர்!

ஒரு கிழமைக்கு முன்பாகத்தான் அங்கே அதிக அளவு 'ரேஷன்' கொடுக்கக் கோரி கடைகள்முன் மறியல் நடத்திய மக்கள் கூட்டத்தின்மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தது நினைவிருக்கலாம்.

இந்திக்காரர்களுக்குப் பரிந்து செயலாற்றுவதா?

இந்திராவின் போக்கு — அண்ணு நிலை விளக்கம்

சென்னை, டிச. 10—

"தற்போது நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்டிருக்கும் ஆட்சி மொழித் திருத்த மசோதா, தலைமையமைச்சர் நேருவின் உறுதிமொழியைச் சட்டபூர்வமாக்கும் முயற்சியாகும்; ஆனுல் இதுவும் நமக்கு முழு மனநிறைவு அளிக்கக்கூடியதாக இல்லை; குழப்பமானதாகவும், வளைந்து கொடுக்கக்கூடியதாகவும், எல்லாத் தரப்பினரையும் 'தாஜா' செய்வதாகவும் இருக்கிறது.

"இந்த மசோதா குறித்து நாம் ஏமாற்றம் அடைந்திருக்கும் இந்த நேரத்தில், மேலும் அதன் தன்மையைக் குறைக்கும் வகையில் திருத்தங்கள் செய்யத் தலைமையமைச்சர் முனைவதாகத் தெரிகிறது. இதனை தி.மு. கழகம் ஏற்காது.

"தலைமையமைச்சரின் கவலை இந்தி பேசாத மக்கள்பால் இருக்க வேண்டும்; அவர்களுக்குத்தான் உறுதிமொழி தேவை. நேருவின் உறுதிமொழியைச் சட்டமாக்கும் நேரத்தில் இந்தி பேசாத மக்களின் கருத்தையே முக்கியமாகக் கேட்டறிதல் வேண்டும். இதைத் தலைமையமைச்சரிடம் எடுத்துக்கூறுமாறு, செழியனிடம் சொல்லியனுப்பியிருக்கிறேன்"

என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணு அவர்கள், செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

"ஆட்சி மொழித் திருத்தச் சட்டத்தை எளிமையாகவும் உறுதியாகவும் செய்யச் சில திருத்தங்களைச்செய்யதி.மு.க. திட்டமிட்டுள்ளது. இத்திருத்தங்கள் மீது டெல்லி அரசு எவ்வாறு நடந்துகொள்கிறது என்பதைப் பொறுத்துத்தான் பார்க்க வேண்டும். ஆட்சி மொழித் திருத்த மசோதாவில் தி.மு. கழகம் எவ்வாறு நடந்துகொள்ளும் என்பதும் அதைப் பொறுத்துத்தான் உள்ளது"

என்று மேலும் அண்ணு அவர்கள் கூறினர்கள்.

காபி விலை உயர்வுக்கு அமைச்சர் கண்டனம்

உணவு விடுதி விலைகளை குறைக்க அரசு நடவடிக்கை?

கோவை, டிச. 11—

"சர்க்கரை விலை காரணமாக ஓட்டல்காரர்கள் காபி விலையை உயர்த்த நியாயமே இல்லை!

"ஓட்டல்களில் தின்பண்டங்களின் விலைவாசிப் போக்கை அரசு கவனித்துவருகிறது; அவசியமானுல் உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்"

என்று, அமைச்சர் கே. ஏ. மதியழகன் அவர்கள் சுட்டிக்காட்டி எச்சரித்தார்.

செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் அமைச்சர் மேலும் கூறியதாவது :—

"ஓட்டல்கள் போன்ற மொத்தமாக வாங்குகிறவர்களுக்கு வெளி மார்க்கெட் சர்க்கரை விரைவில் வழங்கப்படும். வெளி மார்க்கெட் சர்க்கரை விலை கிலோ ரூ. 3.65-ஆகவும், கார்டுக்காரர்களுக்கு கிலோ ரூ. 1.75-ஆகவும் அரசு நிர்ணயித்திருக்கிறது; நாட்டிலேயே இவ்வளவு குறைந்த விலைக்கு எங்குமே வாங்க முடியாது.

சில வட இந்திய நகர்களில் மூட்டை ரூ. 700 முதல் 750-வரை விற்கிறது.

தமிழகத்தில் உற்பத்தியாகும் சர்க்கரையில் வெளி மார்க்கெட்டுக்கு உரிய 40 சதவிகித சர்க்கரையை மாநிலத்துக்குள்ளே தான் விற்க வேண்டும் என்று அரசு ஏற்பாடு செய்திருக்கிறது,"

மக்களவையில்!

★

'நாட்டுப் பற்று' என்பது இந்திக்காரர்களின் ஏகபோகமல்ல! அல்லது இந்தி மொழியை விரும்புவதற்குத்தான் 'நாட்டுப் பற்று என்றும் பெயரல்ல!"

—சமர் குகா
மேற்கு வங்க பி.சோ. உறுப்பினர்

"வன்முறைச் செயல்கள் இந்தியை வளர்க்க உதவாது!"

—சுசேதா கிருபளானி
உ. பி. காங்கிரசு உறுப்பினர்

"இந்திக்காரர்களைப் போலவே இந்தி பேசாதவர்களுக்கும் உணர்ச்சி உண்டு!"

—என். ஜி. ரங்கா
ஆந்திர சுதந்தராக் கட்சி உறுப்பினர்

"இந்தி பேசாதவர்களின் நியாயபூர்வமான அச்சத்தை இந்திக்காரர்கள் உணர வேண்டும். இந்தி திணிக்கப்படுவதை வங்கம் ஒருபோதும் அனுமதிக்காது!"

—அமிய போஸ்
வங்காள பார்வர்டு பிளாக் உறுப்பினர்

கழக ஆட்சி பற்றி அமெரிக்க 'டைம்' ஏடு

இந்தியாவில் பெரும்பான்மை பலம்பெற்ற கட்சி நிர்வாகம் தமிழகத்தில் மட்டுந்தான்!

தோல்விகளின் விளைவாக எதிர்க் கட்சி அரசுகளைக் கவிழ்க்கிறது காங்கிரசு!

மக்கள் வாக்குகளைப் பெற இயலாத நிலையில் மத்திய அரசு மூலம் மாநில நிர்வாகங்கள் கலைக்கப்படுகின்றன

இந்தியாவில் மற்றுமொரு 'அரசியல் காலரா' பரவிவருகிறது! இது, 1967 தேர்தல்களின் விளைவாகத் தோன்றியதாகும்! வரலாறு காணாதவகையில், இந்தியத் தலைமையமைச்சரின் கட்சியான காங்கிரசு, பதினேழு மாநிலங்களில் ஒன்பதினை இழந்தது!

போதுமானதற்கும் மேலாகப் பெரிய பெரும்பான்மைபெற்ற நிர்வாகம், இந்தியாவின் பதினேழு மாநிலங்களில் ஒன்றில் (தமிழகம்) மட்டும்தான் நடைபெறுகிறது. மற்ற எல்லா மாநிலங்களிலும்—பதினான்கு காங்கிரசல்லாத கட்சிகள் கூட்டணி ஆட்சி அமைத்துள்ள அளவுக்கு வாக்குகள் சிதறியிருக்கின்றன!

கூட்டணி நிர்வாகங்களில் உள்ள குழப்ப நிலைகளைப் பயன்படுத்திக்கொண்டு (மத்திய ஆட்சியில் இருக்கும்) காங்கிரசுக் கட்சி கடந்த இரண்டு வார காலங்களில், மூன்று மாநில அரசுகளைக் கவிழ்த்திருக்கிறது! இன்னும் மூன்று நிர்வாகங்களை அப்புறப்படுத்துவதற்கான நேரத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறது!

மக்களின் வாக்குகளைப் பெருததனால் இழந்துள்ள மாநிலங்களை, காங்கிரசு, இதுபோன்ற வகையில் திரும்பப் பெறும் வேலையில் இறங்கியிருக்கிறது!

ஆனால் இது, ஒரு குழப்பத்தைப் போக்குவதற்காக மற்றொரு குழப்பத்துக்கு வித்திடுவது போலத்தான்!

நல்லவர்--வல்லவர்--தமிழக உழவர்!

அவர்களுக்கு இயற்கையோடும் போராட்டம்--- பயிர்பூச்சிகளோடும் போராட்டம்

ஏழை உழவர் வாழ்வில் ஏற்றம் சேர்ப்பீர்

பயிர்ப் பூச்சிக்கொல்லி மருந்து ஆராய்ச்சி நிலையத் திறப்புவிழாவில் முதலமைச்சர் அறிஞர் அண்ணா அறிவுரை

சென்னை, டிச. 11—

"இந்தியாவின் இந்தப் பகுதியில், மெள்ள--ஆனால் உறுதியாக விவசாயப் புரட்சி ஏற்பட்டுவருகிறது!

"தமிழ்நாட்டு விவசாயிகள் கவலையெல்லாம், 'உழைப்புக்கேற்ற பலன் கிடைக்கவில்லையே' என்ற ஒன்றேயாகும்.

"தமிழ்நாட்டு விவசாயிகள், எளிமையும் சகிப்புத்தன்மையும் மிகுந்தவர்கள்! நேர்மைக் குணமும், உறுதியும் மிகுந்தவர்கள்!

'இயற்கைக் கோளாறுகளுடன் போராட வேண்டிய விவசாயி, பூச்சிகளை எதிர்த்தும் போராட வேண்டியிருக்கிறது!

"இந்தியாவில், ரூ. 1,000 கோடி அளவில் பயிர்கள், பூச்சிகளால் அழிக்கப்பட்டுவிடுவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது; இதிலிருந்து விடுபட வழி கண்டாக வேண்டும்"

இவ்வாறு முதலமைச்சர் அண்ணா அவர்கள், அனைத்து நாட்டு மருந்துத் தயாரிப்பாளர்களான 'சிபா' நிறுவனத்தினர், பயிர்ப் பூச்சிக் கொல்லி மருந்து குறித்து நேர்முக ஆராய்ச்சி நடத்திடச் செங்கற்பட்டு மாவட்டத்தில் அமைந்துள்ள ஆராய்ச்சி நிலையத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார் அவர் மேலும் கூறியதாவது :—

"விமானத்திலிருந்து பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்கும் அளவுக்கு இங்கு நிலம் ஒரே சீராக—பெரும் நிலப் பரப்பில் அமைந்திருக்கவில்லை; துண்டு துண்டுகளாக இருக்கின்றன; இருப்பினும் விவசாயிகள், பூச்சிக்கொல்லி போன்ற மருந்துகளின் தேவையை உணர்ந்து அவற்றை நாடுகின்றனர். அவர்களுக்கெல்லாம் பேருதவியாக இந்த ஆராய்ச்சி நிலையத்தின் கண்டுபிடிப்புகள் இருக்கட்டும்.

"விவசாயத்துக்குப் பயன்படும் இத்தகைய இரசாயனப் பொருள்களின் விலைகள், விவசாயிகள் வாங்கிப் பயன்படுத்தும் அளவுக்குக் கிடைத்திட செய்திட வேண்டும். எல்லா நிறுவனங்களும் இதனை நினைவிலிறுத்த வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்."

மாணவர்களைத் தூண்டுகின்றனர் இந்தி வெறியர்கள்!

ஆட்சி மொழிச் சட்டத் திருத்த மசோதாவை எதிர்த்து பாராளுமன்றத்தின் முன்பு மாபெரும் ஆரவாரம் நடத்த இந்திப் பகுதி மாணவர்கள் திட்டமிட்டிருக்கிறார்கள்.

"சுமார் 40,000 மாணவர்கள் பாராளுமன்றத்தின் முன்பு ஆரவாரம் நடத்துவார்கள்" என்று டில்லி பல்கலைக் கழக இந்தி நடவடிக்கைக் குழு கருதுகிறது.

ஆங்கில எதிர்ப்புக் கிளர்ச்சியில் வன்முறையில் ஈடுபட்டுள்ள இலட்சுமணபுரி, வாரணசி மாணவர்களும் இந்த ஆரவாரத்தில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

வலுவான முறையில் ஆரவாரம் நடத்தும்படி இம்மாணவர்களை இந்தி வெறியர்கள் தூண்டிவருகிறார்கள்!

இரஷ்யாவின் கையில் சீனாவின் குரல்வளை!

சீனா – இரஷ்யா இடையிலான 'கெடுபிடி'ப் போர், சீனாவின் விமானப் பராமரிப்பில் பாதக விளைவை உண்டாக்கியது. ஏனெனில், சீனாவுக்கு மிகவும் தேவைப்பட்ட விமான எஞ்சின்கள், விமான உடல் பகுதியின் உறுப்புகள் ஆகியவற்றை அளிப்பதை இரஷ்யா நிறுத்தியது.

சீன விமானப் படை கமாண்டர்களை எதிர்ப்பட்டுள்ளது இந்த ஒரு பிரச்சினை மட்டுமல்ல; சீனாவை எதிர்ப்பட்டுள்ள பிரச்சினைகளிலேயே மிக முக்கியமானது, எரிபொருட்களின் பற்றுக்குறையே ஆகும்.

1964-ல் சீனாவின் பெட்ரோலிய எண்ணெய் உற்பத்தி 60 இலட்சம் டன்களாக இருந்தது; ஆனால், சீனாவின் ஆண்டுத் தேவை 80 இலட்சம் டன்களாகும்; பற்றுக்குறை, இரஷ்யாவிலிருந்துதான் இறக்குமதி மூலம் நிறைவு செய்யப்படுகிறது.

சீனாவின் குரல்வளை இப்போது இரஷ்யாவின் கைகளில் சிக்கிக் கொண்டுள்ளதாகத் தோன்றுகிறது; ஏனெனில், சீனாவுக்கான எண்ணெய் சப்ளையை இரஷ்யா நிறுத்திவிட்டால், சீன இராணு

(2-ம் பத்தி பார்க்க)

(4-ம் பத்தியின் தொடர்ச்சி)

வப் படை செயலற்றுப் போய் விடும்.

சீனாவுக்குள்ள எண்ணெய்ப் பற்றுக்குறை—விமான போட்டிகளை அரசியல் ரீதியில் நம்ப முடியாமை—அவர்களுடைய அனுபவமின்மை ஆகிய காரணங்களால் தான், சமீப ஆண்டுகளில் சீன விமானப்படை முக்கிய பங்காற்றவில்லை!

ஒரு விமானப் படையைச் சிறந்த தாக்குவதற்குத் தேவையான பயிற்சி பெற்ற சிப்பந்திகள்—செய்தித் தொடர்பு—ராடார் சாதனங்கள்—எரிபொருள்—ராக்கெட் ஆகிய அனைத்துமே சீனாவுகுத் தேவைப்படுகின்றன.

ஒருமைப்பாட்டை எவ்வாறு உருவாக்க இயலும்?

சென்னை, டிச. 9—

"'இந்தியா ஒற்றுமையாக இருக்க வேண்டும்' என்பது ஏற்றுக் கொள்ளக்கூடியதுதான்; ஆனால், 'ஒற்றுமை' என்று எண்ணிக்கொண்டு, இந்தியா முழுவதற்கும் ஒரே மொழி—ஒரே மாதிரியான உணவு—ஒரேமாதிரி உடை, கலாச்சாரம் இருக்க வேண்டுமென்பது தவறான வாதமாகும்; அது, ஒற்றுமையைக் குலைக்குமே தவிர, உருவாக்காது!

"'ஒருமைப்பாடு' என்பது, மனப்பூர்வமான ஒன்று ஆகும். ஒவ்வொரு மாநிலத்துக்கும் அதனதன் மொழி—கலை—பண்பாடு—பழக்கவழக்கங்களில் தனிச் சிறப்பு இருக்கும்; அந்தச் சிறப்பை அழித்துவிட்டு, ஒருமைப்பாட்டை உருவாக்க இயலாது; அதனதன் தனிச் சிறப்புக்களையும் பாதுகாத்து உருவாக்கப்படும் ஒருமைப்பாடே, உண்மையான ஒருமைப்பாடு ஆகும்."

தமிழக அமைச்சர்
இரா. நெடுஞ்செழியன்
(மலையாளிகள் மாநாட்டில்)

காதில் விழுந்தது!

★

"பாட்னா தெரியுமா?"

"ஆமாம்; பீகாரின் தலைநகர்!"

"அங்கே உள்ள அரசு, தலைநகர எல்லைக்குள்ளாக இருக்கும் ஆங்கில பெயர்ப் பலகைகளையெல்லாம் அப்புறப்படுத்திவிட்டு, இந்தியில் மட்டுமே பெயர்ப் பலகைகள் எழுத அனுமதிக்கும் வகையில் சட்டம் செய்யப் போகிறது!"

"சரி, இந்தி மாநிலம்; எனவே ஆங்கிலத்தை அப்புறப்படுத்துகிறார்கள்; இதிலென்ன புதுமை?"

"பழைய நினைவு ஒன்று வந்தது; அதற்காகத்தான் பாட்னாவைக் காட்டினேன். தமிழக அரசு தனது சொந்த போக்குவரத்துப் பேருந்துகளில் ஊர் பெயர்களைக்கூட அல்ல—இலாகா பெயரை மட்டும்—தமிழில் எழுதியதற்கு, இங்கே உள்ள காங்கிரசுக்காரர்கள் என்ன சொன்னார்கள் தெரியுமா?—'சென்னை தலைநகரமாயிற்றே; நாலு பேர் வந்து போகும் இடமாயிற்றே; தமிழ் தெரியாதவர்கள் அவதிப்பட நேருமே' என்றார்கள்; ஆனால் பாட்னாவிலோ, தனியார் கடைகள்—நிறுவனங்கள் கூட, இந்தியில் மட்டுமே அறிவிப்புக்களை எழுதவேண்டுமென சட்டமே பிறப்பிக்கப் போகிறார்கள்!"

"இந்தச் செய்தியைக் கேட்டதும் ஒரு சந்தேகம்..."

"என்ன, கேள்!"

"இங்கே உள்ள முன்னாள் ஆளும் கட்சியினர் தமிழர்களா? இல்லை—காங்கிரசுக்காரர்களா?"

"தமிழர்களோ இல்லையோ—ஆனால், காங்கிரசுக்காரர்கள்தான்!"

★

"லீகோ தெரியுமா?"

"என்ன; இன்று எல்லாக் கேள்விகளையும், 'தெரியுமா' என்றே ஆரம்பிக்கிறாய்?"

"மனதில் கனமுள்ள விஷயங்களை விவாதிக்கும்போது இப்படித்தான் கேள்வி பிறக்கும்; அது போகட்டும்; அந்த 'லீகோ' கரி இப்போது சென்னையில், தட்டுப்பாடு—விலையேற்றம்—கலப்படம் ஆகிய மூன்றையும் அனுபவிக்கிறது!"

"ஏன் அப்படி? நெய்வேலியில்தானே உற்பத்தி செய்கிறார்கள்? எல்லோரையும் வாங்கும்படி பத்திரிகை விளம்பரம் போட்டு சிபாரிசு வேறு செய்கிறார்களே!"

"அது என்னவோ உண்மைதான்; ஆனால் நான் கேள்விப்படுவதென்னவோ..."

"பெரிய விஷயமாக இருக்கும் போலிருக்கிறதே! சொல்லுங்கள்!"

"மத்திய அரசின் நிர்வாகத்தின்கீழ் உள்ள நெய்வேலி நிலக்கரியை, கழக அரசின் கீழுள்ள தமிழகத்து நகரங்களில், 'ஒரு' பற்றுக்குறை—கலப்பட—விலையேற்றப் பிரச்சினையாக்கி, அதன்மூலம், சரிவர விவரம் தெரியாத மக்களிடையே தி. மு. க. நிர்வாகத்தைப் பற்றி வெறுப்படையச் செய்யலாம் என்று சில வியாபாரிகள் சேர்ந்து முடிவெடுத்திருக்கிறார்களாம்!"

"அப்படியா? இது நெய்வேலி நிர்வாகத்துக்குத் தெரியாதா?"

"அதுதான் எனக்கும் தெரியவில்லை!"

—எஸ். ஆர்.

அரசியல் அரங்கத்துக்குப் பொருந்தி வராத மனிதராகிவிட்டார் காமராசர்—அவரது செல்வாக்கு இனி செல்லாக் கணக்கே!

உயரே ஏறியது அசாத்தியத் திறமையினாலல்ல—'ஊர் பேர் தெரியாதவர்கள் நாட்டின் காவலரல்ல' என்பதை அறிவாளர் உலகம் உணர்ந்துவிட்டது!

மக்கள் தலைவரின் 'மகத்தான சரிவு'—'சங்கர்ஸ் வீக்லி' மதிப்பீடு

அனைத்திந்தியக் காங்கிரசுத் தலைவர் தேர்தலின் விளைவுகளையொட்டி இந்திய அரசியலில், காமராசரின் 'இறங்கு முகம்' பற்றிப் புதுடில்லியிலிருந்து வெளிவரும் பிரபல கேலிச் சித்திர வாரப் பத்திரிகை, தனது 3–12–67 இதழில், 'இவ் வார மனிதர்' என்ற பகுதியில் எழுதியிருப்பதன் மொத்தக் கருத்து வருமாறு :—

"பொதுமக்கள் தொடர்புடையோர்—பத்திரிகை எழுத்தாளர்கள்—வர்த்தக உலகப் பிரதிநிதிகள்—அயல்நாட்டுப் பார்வையாளர்கள் ஆகிய அனைவருமாகச் சேர்ந்து, மூன்று ஆண்டுகளுக்கு முன்புதான் இப்படிக் கூறினார்கள்—'நேருவுக்குப் பின் இந்தியாவின் எதிர்காலம், சென்னை மாநிலத்துக் குமாரசாமி காமராசரின் கரங்களில்தான் இருக்கிறது' என்பதாக!

இதை மேலும் 'நிறைவு' செய்யவேண்டி, இந்தியாவின் இடதுசாரிக் கொள்கையுடைய அமைப்புகளெல்லாம் அவரைத் தங்களுக்கே சொந்தமாக்கிக் கொண்டதோடு அல்லாமல், 'காமராசர், ஒரு இரகசிய சோஷலிசவாதி' என்றும் நம்பி வந்தன!

இவையெல்லாம் காமராசரின் பழைய கதை—இறந்த காலம்!

அடுத்த கிழமை நடைபெறவிருக்கும் தலைவர் தேர்தலிலிருந்து, காமராசர், இனி இந்திய அரசியல் அரங்கத்துக்குப் பொருந்தி வராத மனிதராக மாற இருக்கிறார்! அவருக்கு இருந்ததாகச் சொல்லப்பட்ட செல்வாக்கு, இனி செல்லாத கணக்குதான்!

அரசியலில் இதுபோன்ற திருப்பங்கள் நடப்பது வாடிக்கைதான்!

ஆனாலும் இத்துணை விரைவில், இந்தியாவின் அறிவாளர் உலகம், 'ஊர் பேர் தெரியாத (unknown) இந்தக் காமராசர் நாட்டின் காவலராக இருக்கமுடியாது' என்பதை உணர்ந்துகொண்டதற்கு வேறு சான்றுகள் இல்லை!

அசாத்தியத் திறமைகளினால் காமராசர், இப்படிப்பட்ட உயரத்துக்குச் செல்லவில்லை; 'பிராமணீய எதிர்ப்பு' வெள்ளம் எழுப்பிய கருத்து வெள்ளத்துடன்—நீரோட்டத்துடன் சென்று முன்னேறியவர் அவர்!

இந்தி பேசாத மாநிலங்களிலும், குறிப்பாகத் தமிழகத்திலும் காங்கிரசு பெற்றுள்ள வீழ்ச்சி, 'காமராசர் போன்ற கட்சித் தலைவர்களால் பலன் ஏதும் இல்லை' என்ற முடிவினைத்தான் கொடுத்திருக்கிறது!

ஏதோ ஒரு 'இந்தியா'வை அவர் பிரதிபலிப்பதாக நினைத்துக் கொண்டிருந்தார்கள்; ஆனால் அது, இப்போது அம்பலம் ஆகிவிட்டது!

இந்தியாவில், 'பிரதேச உணர்வு' வாழ்க்கையின் தத்துவமாகிவிட்டது!

பதவி இல்லாவிட்டாலும், காமராசரை, 'ஒரு பிரதேசத்துப் பிரதிநிதி'யாகத்தான் காங்கிரசுக் கட்சி இனி கருதக் கூடும்."

அமைச்சர்

ஏ. கோவிந்தசாமி

சுற்றுப்பயணம்

டிச. 13 காலை 8-மணி: திருவண்ணாமலை; 9-மணி: மூங்கில்துறைப்பட்டு—கூட்டுறவு சர்க்கரை ஆலைத் திறப்பு விழா; 11-மணி: போளூர்—வேளாண்மைக் கிடங்கு, கால்நடை மருத்துவமனை திறப்பு விழா; ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 12-மணி: காட்பாடி, கே. வி. குப்பம் ஊராட்சி வரவேற்பு; வேளாண்மைக் கிடங்கு, கால்நடை மருத்துமனை திறப்புவிழா; ஊராட்சி ஒன்றியக் கட்டடம், துவக்க பள்ளிக் கட்டடம், ஆகியவற்றில் அடிக்கல் நாட்டுதல், பத்ரம்பள்ளி மேல்நிலை நீர்த்தொட்டி அடிக்கல் நாட்டுதல்; பிற்பகல் 3-மணி: இராசா தோப்பு பார்வையிடல்; மாலை 4-மணி: காட்பாடி ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 6-மணி: சயராபேட்டை—ஊராட்சி வரவேற்பு.

டிச. 14 காலை 9-மணி: தோப்பூர்—அரசு உயர்நிலைப் பள்ளி வானொலிப் பெட்டி துவக்கிவைத்தல்.

டிச 15: சங்கரி.

டிச. 16 காலை 9-மணி: தாரமங்கலம்—கால்நடை மருத்துவமனை கட்டிடத் திறப்பு விழா; 9-30 மணி: ஓமலூர்—வேளாண்மைக் கிடங்கு, கால்நடை மருத்துவமனை திறப்பு விழா; 10-30 மணி: தாராபுரம்-பள்ளிக் கட்டடத் திறப்பு விழா; காலை 11 மணி: மரக்கோட்டை-பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா; பகல் 12-மணி: பூசாரிப்பட்டி-பொது மக்கள் வரவேற்பு; பிற்பகல் 1-மணி: நடுப்பட்டி-அருந்ததிய விவசாயிகள் வரவேற்பு; 3-மணி: தடோகப்பட்டி—கோத்தாரி கலப்பு உரத் தொழிலகம் திறப்பு; மாலை 4-30 மணி: செக்காதப்பட்டி—ஊராட்சி வரவேற்பு; மாலை 6-மணி: ஒண்டிவீரனூர்—பள்ளிக் கட்டிடத் திறப்பு விழா;

டிச. 16 காலை 9-மணி: தொப்பம்பட்டி—ஊராட்சி வரவேற்பு; 10-மணி: வனத்துறைப் பகுதிகளில் பார்வையிடல்; பகல் 12-மணி: நாமகிரிப்பேட்டை—ஊராட்சி வரவேற்பு.

அமைச்சர்

சத்தியவாணிமுத்து

சுற்றுப்பயணம்

டிச. 12 பகல் 12-30 மணி: திருப்பத்தூர் நிகழ்ச்சிகள்; இரவு 7-மணி: பொதுக்கூட்டம்; 13, 14: சங்கரி தொகுதியில் சுற்றுப்பயணம்.

அமைச்சர்

கே. ஏ. மதியழகன்

சுற்றுப்பயணம்

டிச. 12: கோவை.
டிச. 13: போடிநாயக்கனூர்.
டிச. 14, 15: சங்கரி தொகுதி சுற்றுப்பயணம்.
டிச. 16: சேலம்.
டிச. 17: விருத்தாசலம்.

அமைச்சர்

செ. மாதவன்

சுற்றுப்பயணம்

டிச. 13 காலை 9-மணி: மூங்கில்துறைப்பட்டு — கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலைத் துவக்க விழா.

வேலை இழந்த கோவை ஆலைத் தொழிலாளருக்கு உதவி

5,149 பேர்களுக்கு தலா ரூ. 40 கிடைக்கும்

கோவை மாவட்டக் கலெக்டர் தரும் தகவல்

கோவை, டிச. 8—

"கோவை மாவட்டத்தில் மூடப்பட்ட ஆலைத் தொழிலாளர்களுக்குத் தலா ரூ. 40 வழங்கத் தமிழக அரசு முன்வந்திருக்கிறது.

"இத்தொகை முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து அளிக்கப்படுகிறது; இதனால் 5,149 தொழிலாளர்கள் பயன்பெறுவர்"

என்று கோவை மாவட்டக் கலெக்டர் அன்புரோசு, செய்தியாளர்களிடம் தெரிவித்தார்; 'டிச. 11-ம் நாள் காலை 10 மணியிலிருந்து மாலை 5 மணிக்குள் இத்தொகை தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதற்காக ரூ. 2 இலட்சம் காசோலையை (செக்) முதலமைச்சர் அண்ணா அவர்கள் இன்று கோவை கலெக்டருக்கு அனுப்பி வைத்தார்.

தொழிலாளர்கட்கு இத்தொகை பகிர்ந்தளிப்பது குறித்துக் கலெக்டருடன் தொழிற்சங்கத் தலைவர்களான காட்டூர் கோபால், குமாரசாமி, சின்னய்யன், எம். பூபதி, பி. எஸ். சின்னதுரை, டி. எல். சுப்பையன் ஆகியோர் பேசினர்.

கோவை மாவட்டத்தில் மூடப்பட்டுள்ள 5 ஆலைகளையும் திறக்க தமிழக அரசு முடிவு செய்துள்ளதென்றும், அதில் வேலையில்லாத தொழிலாளர்களுக்கு வேறு வேலை தேடிக் கொடுக்கப்படுமென்றும், அப்படியும் வேலை கிடைக்காதவர்களுக்கு, சாலை அமைத்தல்—கிணறு வெட்டுதல் போன்ற பணிகள் கொடுக்கப்படுமென்றும் கலெக்டர் மேற்கொண்டு பேசுகையில் செய்தியாளர்களிடம் கூறினார்.

கேட்டுக்கொண்டால் மறுக்கமாட்டாராம்!

"தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலைவர் பதவியை ஏற்கும்படியாகக் கேட்டுக்கொள்ளப்பட்டால், 'மாட்டேன்' என்று நான் சொல்லமாட்டேன்" என்று சி. சுப்பிரமணியம் கூறியுள்ளார்.

தமிழ்நாடு காங்கிரசுக் கமிட்டித் தலைவர் பதவிக்கு சுப்பிரமணியத்தின் பெயர் அடிபடுவது குறித்து அவரிடமே செய்தியாளர் கேட்டார்.

நேரடியாக பதில் அளிக்க சுப்பிரமணியம் மறுத்துவிட்டார்; "இது பற்றி இப்போதைக்கு எதுவும் சொல்வதற்கு இல்லை; ஆனால் தமிழ்நாடு காங்கிரசுக் கட்சித் தலைமைப் பதவியை ஏற்கும்படியாக நான் கேட்டுக்கொள்ளப்பட்டால், 'மாட்டேன்' என்று சொல்லமாட்டேன்" எனக் கூறினார்.

திருவனந்தபுரத்திலிருந்து விஜயவாடாவுக்கு!

'மா சே-துங்' பயணம்!

சிவப்பு எழுத்துக்களாலான பெரிய சுவரொட்டிகள் விஜயவாடாவின் தெருக்களில் திடீரெனக் காணப்படுகின்றன!

மா சே-துங்கின் தத்துவங்களைக் கொண்ட அந்த அறிவிப்புக்கள், அண்மையில் தெலுங்கில் மொழி பெயர்க்கப்பட்ட சீனத் தலைவரின் கருத்துக்கள் அடங்கிய புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டவையாக இருக்கின்றன!

இதேபோல், சில நாட்களுக்கு முன்னர், திருவனந்தபுரத்துத் தெருக்களிலும் 'மா சே-துங்', தனது தத்துவங்கள் மூலம் 'தோற்றம்' அளித்தது இங்கு நினைவு கூரத்தக்கது!

தென்னாற்காடு மாவட்ட

சீரணியினரின் சிறப்புப் பணி

6-மணி நேரத்தில் 2,000 அடி நீளமுள்ள வாய்க்கால் வெட்டினர்

அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் பெருமிதம்

விழுப்புரம், டிச. 9—

தென்னாற்காடு மாவட்டத்தைச் சேர்ந்த சின்னச்சேலம் சீரணியினர், கடத்தூர் ஓடையிலிருந்து தொட்டியம் ஏரிக்கு வாய்க்கால் வெட்டினர்; இந்த வாய்க்காலைப் பார்வையிடுவதற்காக வந்த அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களும், மண் வெட்டி ஏந்தி வாய்க்கால் வெட்டும் பணியில் ஈடுபட்டார்; அவருடன் சட்டமன்ற உறுப்பினர் எஸ். பி. பச்சையப்பனும், மற்றும் கழகத் தோழர்களும் கலந்துகொண்டனர்.

2,000 அடி நீளமுள்ள இந்த வாய்க்காலை, 6-மணி நேரத்தில் இந்தச் சீரணியினர் வெட்டி முடித்தனர்.

வாய்க்கால் வெட்டும் பணியில் ஈடுபட்ட சீரணியினரைப் பாராட்டிப் பேசுகையில், அமைச்சர் இரா. நெடுஞ்செழியன் குறிப்பிட்டதாவது :—

"பயன் கருதாமல்—பயன் பெறுமல் இப்பணியில் ஈடுபட்ட சீரணியினரைப் பாராட்டுகிறேன்; குறுகிய நேரத்தில் வாய்க்காலை வெட்டி முடித்தது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

"கூலி ஆட்களை வைத்து இந்த வாய்க்காலை வெட்டி இருந்தால் ரூ. 332 செலவாகி இருக்கும்; இந்தப் பணம் அரசுக்கு மிச்சம்.

"இதுபோன்று, ஆண்டுக்கு ஒரு முறையானது பயனுள்ள பணியைக் கிராமத்தில் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்."

மங்களா அணை கூறும் மங்கையின் கதை

இராவல்பிண்டி, டிச. 5—

ஜீலம் நதியின் மீதான மாபெரும் மங்களா அணை மூலம் உலகப் புகழ் பெற்றுள்ள மங்களா பகுதி ஒரு காலத்தில் சிருங்காரமும், கற்பனைக் கதைகளும் நிலவிய பகுதியாக இருந்தது.

அக்காதல் கதைகளில் மிகவும் பிரபலமான ஒன்று அரசி கோகிலாவைப் பற்றியதாகும். அவளுடைய தகப்பனாரான மன்னர் சிர்காப், சூதாட்டப் பிரியர்! அவர், தம்முடைய தலையையே பணயமாக வைத்துச் சூதாடுவாராம்! ஒரு காலத்தில், மங்களாவில் அவருக்கு ஒரு கோட்டை இருந்தது.

ஒரு தடவை மன்னர் ராசாலுவுடன் சிர்காப் சூதாடியபோது அதில் தோற்றுவிட்டார்; அவர் தமது தலையையும் பறிகொடுக்க வேண்டிய நிலைக்கு ஆளானார். எனவே, தமது உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அவர், தம் அழகிய மகளான கோகிலாவை இராசாலுவுக்குத் திருமணம் செய்து கொடுக்க முன்வந்தார்; ராசாலுவும் அதை ஏற்றுக்கொண்டு, கோகிலாவைத் திருமணம் செய்துகொண்டார்.

அரசி கோகிலாவின் பல்லக்கு வைக்கப்பட்ட படகு ஜீலம் நதியின் வலது கரை ஓரமாக உள்ள கால்வாய் வழியே சென்றுகொண்டிருந்தது; அக்கால்வாய் ஓரமாக உள்ள 'பரால்' என்னுமிடத்தில்தான், அண்மையில் மங்களா அணை ஆரம்ப விழாவின்போது அயூப்கானும், அவருடைய விருந்தினர்களும் விருந்துண்டனர்.

அரசியின் படகு சென்றுகொண்டிருந்தபோது, சுல்தான்பூரைச் சேர்ந்த 'ஹூடி' என்னும் மற்றொரு மன்னர், அந்த அரசியின்மீது காதல்கொண்டு அவளைத் தூக்கிச் சென்றான்!

கோகிலாவின் கிளி உடனே பறந்து சென்று போத்வாரில் போரிட்டுக் கொண்டிருந்த மன்னர் ராசாலுவிடம் தகவல் தெரிவித்ததாம்.

பிறகு இரு மன்னர்களுக்கும் போர் மூண்டது; அது, கோகிலாவின் துயரத்தில் முடிந்தது!

இன்னமும் போத்வார் வட்டாரத்தில் நாட்டுப் பாடல்களிலும் கதைப் பாடல்களிலும் கோகிலாவின் பெயர் அழியாமல் நிற்கிறது.

பொழுது விடிந்தபின் கூவிடும் சேவல்!

'எங்கே தகவலேயே காணும்' என்று காமராசரைப்பற்றி—இந்தப் பத்திரிகையில்தான் இரண்டு நாட்களுக்கு முன்பாகக் கேட்டிருந்தார்கள்; அந்தக் குறையைப் போக்கிவிட்டார் காமராசர்!

"ஆட்சிமொழிச் சட்டத் திருத்தம் அப்படியே வரவேண்டும்; மாற்றம் ஏதும் செய்யப்படக்கூடாது"—இதுதான் காமராசர் கருத்து என்பதை, பத்திரிகை நிருபர்கள் வெகு சிரமப்பட்டுச் சம்பாதித்திருக்கிருர்கள்!

ஒருவகையில் பெங்களூர் நிருபர்கள், 'சபாஷ்' என்று பாராட்டப்படவேண்டியவர்களே! சென்னைச் செய்தியாளர்கள் சாதிக்க முடியாதவற்றை அவர்கள் செய்திருக்கிருர்களல்லவா!

தமிழகத்தின் தெற்குக் கடற்கரையில் தோன்றிய புயற்காற்று கூட, அழுத்தம் குறைந்து உட்பகுதியில் புகுந்து மைசூர் பிரதேசம் போய் மறைந்ததாம்! அந்த வகையில், பொருத்தம் பார்த்துத்தானே என்னவோ—மொழி மசோதாபற்றிய கருத்தினைப் புதுடில்லியில் கூருமல்—இங்கே தமிழகம் வந்துவிட்ட தைரியத்திலாவது சொல்லாமல்—நடுவில் ஒரு நாள் போய்வந்த பெங்களூரில் 'பேசியிருக்கிருர்! காங்கிரசு மேலிடம் கூடிப் பேசியது—அப்போது வாய் திறக்கவில்லை!

காங்கிரசுப் பாராளுமன்றக் கட்சிதான், 'திருத்தச் சட்டத்திலும் மாற்றம் தேவை' என்று வாதாடியது! அதற்கும் அவர், தனது கருத்து என்ன என்பதைச் சொல்லி அனுப்பவில்லை!

தமிழ்நாடு காங்கிரசின் தயாரிப்பாக—இங்கே இருந்து மாணவர் கூட்டம் ஒன்று டெல்லிக்குச் சென்று இந்திராவை மட்டுமல்ல—காமராசரையும் சந்தித்துத் திரும்பியது; அந்தப் பிரதிநிதிகளிடமாவது, 'நீங்கள், அரசியல் சட்டத் திருத்தம் வேண்டாமென்று கூறினாலும் கூறுங்கள்; ஆனல், இப்போது வந்திருக்கிற மசோதாவில் மாற்றம் கூடாது என்பதனை மட்டும் மறக்காமல் வலியுறுத்தங்கள்' என்று காமராசர் கூறியிருந்திருக்கலாம்! அதுவும் இல்லை!

"மசோதா அப்படியே நிறைவேற்றப்பட்டால்தான் ஓரளவு பாதுகாப்பாவது மிஞ்சும்; கலப்படம் கூடாது" என்று கடந்த சனியன்று மாலை சென்னையில் அண்ணா அவர்கள் திட்டவட்டமாக அறிவித்ததற்குப் பின், மறுநாள் காலை பெங்களூரில் வாய் திறந்திருக்கிருர் காமராசர்!

எதற்காக இத்தனை நாள் அமைதியாக இருந்தாரோ தெரியவில்லை! மசோதாவினை வரி வரியாகப் பிரித்துப் பிரித்து எடுத்து அலசிப் பார்த்திருப்பார் போலிருக்கிறது!

அல்லது, 'உங்கள் கருத்து என்ன என்று இந்திரா நம்மைக் கேட்கவில்லையே' என்ற கோபமாகக்கூட இருக்கலாம்!

"தலைவர் தேர்தல் மோதலில்—நேரில்—புதுடில்லியில் இருக்கும் போதுதான் கேட்க மனம் இல்லை; சென்னைக்கு வந்தபின், ஓர் 'ஆளை' அனுப்பியாவது 'யோசனை' கேட்டிருக்கக் கூடாதோ" என்றுகூடக் காமராசர், 'வேக'த்தில் இருந்திருக்கலாம்!

அப்படியென்ன—காமராசர், முன்பின் அறிமுகமாகாதவரா! இல்லையே!

"கட்சியின் தலைவரோ இல்லையோ—அவர் கடைசி மூச்சு இருக்கும் வரையில் இந்தி எந்தப் பக்கமும் இங்கே புகுந்துவிடாது; நம்புங்கள்" என்று பின்னலிருப்பவர்கள், ஏற்கனவே பலமுறை சொல்லியிருக்கிருர்களே!

அப்பேர்ப்பட்ட முக்கியஸ்தர், மொழி மசோதா பற்றி எவ்வளவு முன்கூட்டிக் கருத்துத் தெரிவித்திருக்கிருர் பார்த்தீர்களா?

"அரசியல் சட்டத்தில் திருத்தம் செய்வதுதான் நிரந்தரமான பாதுகாப்பு" என்று சொல்லும் கழகமாவது, மசோதா பற்றி இரண்டாவதாகக் கருத்தினைச் சொல்லலாம்; ஆனல், 'மசோதாவே போதும்' என்று மலைபோல் அதனை நம்புபவர்களல்லவா, அதன் உண்மை நிலை என்ன என்பதை உடனுக்குடன் கவனித்து எண்ணத்தைத் தெரிவிக்கவேண்டும்?

'மாற்றம் இல்லாமல் மசோதா நிறைவேற வேண்டும்' என்பதைச் சொல்லுவதற்கே பெங்களூரில் இடம் பார்த்த காமராசர், 'அப்படி மாற்றங்களை வலிந்து திணித்தால் என்ன செய்வது?' என்பது பற்றியாவது ஏதாவது சொல்லியிருக்கிருரா என்றுல் இல்லை!

"அதுபற்றியெல்லாம் துருவித் துருவிக் கேட்காதீர்கள்; அப்புறமாக ஒருநாள் சொல்லுகிறேன்" எனக் கூறியிருக்கிருர்.

வரும் சனவரியில் நடக்கும் 'சங்லி' மாநாட்டில், சாதாரண காமராசராக மாற இருக்கும் அவர், இன்னும் கொஞ்சம் நாட்கள் கழித்துச் சொல்வதை யார் கேட்பார்களோ தெரியவில்லை!

"மசோதாவில் மாற்றம் கூடாது; இல்லையேல், கழகமே எளிதான—பாதுகாப்பான—நடைமுறைக்கு ஒதுவரும் திருத்தம் ஒன்றினைத் தரும்" என்று அண்ணா அவர்கள் கூறியிருக்கிருர்கள்!

இதற்குப் பின்னலும் காமராசரும், அவரது கட்சியும் செய்ய வேண்டிய காரியம் ஒன்றுதான் இருக்க முடியும்.

பதவியில்—ஆட்சியில் இருந்தபோது தமிழ்நாட்டுக்கு மொழித் துறையில் பாதுகாப்பைப் பெற்றுத்தர முடியாத காமராசர்—அவரது கட்சியினர் ஆகிய இரண்டு சாராருமே இப்போது, அதற்காக என்று இருக்கும் ஒரே அமைப்பின் கழகத்தின் வழி நடப்பதுதான் உத்தமமான காரியமாக இருக்கமுடியும்!

கட்சித் தலைவர் பதவி—மாநில நிர்வாகம்—என்ற கட்டுப்பாட்டில் மனதுக்கோ, மக்களுக்கோ விரோதமாக முன்பு பேசவேண்டிய நிலையில் இருந்த காமராசரும், காங்கிரசும் இப்போது இல்லை; இனியாவது அல்லது இதில் ஒன்றிலாவது அவரும், அவரது கட்சியும் மனச்சாட்சிப்படி அல்லது மக்களது விருப்பப்படி நடக்கட்டும்!

பொழுது விடிந்து சில மணி நேரமும் சென்றபின்னர், ஓரிரு முறை கூவி தனது 'கடமை'யைச் செய்யும் சேவலைப்போல், மசோதாவின் மாற்றங்கள்பற்றிக் காமராசர் இந்தச் சுருக்கமான கருத்தைக் கூறி, 'சாமர்த்தி'யத்தைக் காட்டிக்கொண்டிருப்பதாக நினைத்துவிட வேண்டாம்!

அப்படி—அவரது கட்சியையும் கருத்தையும் மீறி மாற்றம் வந்தால், எங்கே—எப்படி இருப்பார் என்பதுதான் முக்கியம்!

—எஸ். ஆர்.

நடக்க இருப்பவை

12--12--67

பழங்காநத்தம்

கே. வி. கே. சாமி நினைவு படிப்பகச் சார்பில் மாலை 6-மணிக்கு; தலைவர்: சா. நாகலிங்கம்; பேசுவோர்: பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., கா. காளிமுத்து பி.ஏ., எஸ். நெல்லை மாறன், அ. வெள்ளைச்சாமி, அ. பாலன், இரா. பாண்டி, கி. முனியாண்டி.

திருப்பத்தூர் (வ. ஆ.)

தி. மு, க. சார்பில் இரவு 7-மணிக்கு திரு. வி. க. திடலில்; தலைவர்: சி. எம். எஸ். வேலு; பேசுவோர்: அமைச்சர்கள் கே. ஏ. மதியழகன், சத்தியவாணி முத்து, மா. முத்துச்சாமி, மற்றும் என். வி. நடராசன் எம்.எல்.சி., மற்றும் பலர்.

சத்தி – தேவாங்கபுரம்

கலைஞர் கருணநிதி மன்றத் துவக்க விழா; மாலை 7-மணிக்கு சத்தியமங்கலம் ஊராட்சிமன்றத் திடலில்; தலைவர்: ஆர். கோபால்சாமி; பேசுவோர்: தமிழரசி பி.ஏ., எஸ். ஜி. கண்ணப்பா, எஸ். கே. சுப்பிரமணியம், சக்தி இளங்கோவன், எஸ். ஆர். இராசப்பன், மு. சுப்பிரமணியம், மற்றும் பலர்.

13--12--67

சிவகாசி

தி. மு. க. சார்பில் இரவு 8-மணிக்கு மாரியம்மன் கோயில் திடலில்; பேசுவோர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன், பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., எஸ். பி. மணியம், ஏ. துரைக்கண்ணன், மற்றும் பலர்.

திருத்தங்கல்

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு என். எஸ். கே. திடலில்; தலைவர்: ஓ. வி. ஐயனர்; பேசுவோர்: இரா. நெடுஞ்செழியன், எஸ். எஸ். தென்னரசு, பெ. சீனிவாசன் எம்.எல்.ஏ., க. அங்கையா, எஸ். பி. மணியம், மற்றும் பலர்.

இந்தி வெறியரின் 'வெறிப் பேச்சு'

கிளர்ச்சியை தூண்டும் மாநாட்டுத் தீர்மானம்

புதுடில்லி, டிச. 10—

"இப்பொழுது நாடாளுமன்றத்தில் ஆட்சிமொழிச் சட்டத் திருத்த மசோதா நிறைவேற்றப்பட்டு விட்டாலும், அதனை எந்த நேரத்திலும் திரும்பப் பெறச் செய்ய முடியும்"

என்று இந்தி வெறியரான சேத் கோவிந்ததாஸ், இந்தி எழுத்தாளர்கள்—கவிஞர்கள் மாநாட்டில் பேசுகையில் கூறிஞராம்.

அவர் மேலும் பேசுகையில், 'தற்போது நடக்கும் ஆங்கில எதிர்ப்புக் கிளர்ச்சி, தமிழ்நாட்டில் 1965-ல் நடந்த இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியின் எதிரொலியே' என்றும் கூறியிருக்கிருர்.

ஆங்கில எதிர்ப்புக் கிளர்ச்சியில் வன்முறை தலைகாட்டுவதற்கும் தமிழ்நாடுதான் காரணமாம்.

ஆங்கிலத்தின் இடத்தை இந்தி பிடிக்கும் வரை ஆங்கில எதிர்ப்புக் கிளர்ச்சி தொடர்ந்து நடக்குமாம்.

ஆங்கிலம் துணை ஆட்சிமொழியாவதை அனுமதிக்க முடியாது என்றும், நாடு முழுவதும் கிளர்ச்சி நடத்தி ஆங்கிலத்தை விரட்டப் போவதாகவும் மாநாட்டில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

திருப்பத்தூர் நகராட்சி 80-வது ஆண்டு நிறைவு விழா

திருப்பத்தூர் நகராட்சி 80-வது ஆண்டு விழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிகள்; 12—12—67 மாலை 5 மணிக்கு; தலைவர்: ஆர். முத்து எம்.பி.; வரவேற்புரை: சி. கே. சின்னராசு எம்.எல்.ஏ.; பேசுவோர்: அமைச்சர்கள் கே. ஏ. மதியழகன், சத்தியவாணிமுத்து, மா. முத்துசாமி, என்.வி. நடராசன் எம்.எல்.சி., மா. பா. சாரதி எம்.எல்.ஏ., ஆர். சம்பங்கி, டி. சி. திம்மராயன் எம்.எல்.ஏ., ஈ. எல். இராகவனர் பி.ஏ.பி.எல்., டி. ஜி. விசுவநாதனர்.

மூன்றும் நாள் நிகழ்ச்சிகள்

13—12—67 மாலை 5 மணிக்கு; தலைவர்: எம். கமலநாதன் எம்.பி.; வரவேற்புரை: கே. ஜி. அப்துல் ரசீத் பி.ஏ.ஆனர்சு; பேசுவோர்: முதலமைச்சர் அறிஞர் அண்ணா, சென்னை மேயர் டாக்டர் அபிபுல்லா பேக், சி. வி. இராசகோபால் எம்.எல்.சி., வி. கே. கோதண்டராமன் எம்.எல்.ஏ., நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி. (பெரியார் ஈ. வெ. ரா. படத்தை அண்ணா அவர்கள் திறந்துவைப்பார்கள்.)

கோ. சி. மணி

சுற்றுப்பயணம்

டிச. 12: குடந்தை; 13: கோவிந்தபுரம்; 14: திருச்சி; 15: மதுக்கூர்; 16: சங்கரி; 17: மதுரை; 18, 19, 20: சங்கரி தொகுதி; 21: விழுப்புரம் வட்டம்; 24: காரைக்குடி.

படி அரிசித் திட்டம் கைவிடப்படமாட்டாது

பத்திரிகைச் செய்திக்கு அமைச்சர் மதியழகன் மறுப்பு

கோவை, டிச. 10—

"படி அரிசித் திட்டத்தை அரசு கைவிடும் என்ற பேச்சுக்கே இடமில்லை. மேலும், தமிழகத்தில் குடும்பக் கார்டு முறை செயலில் உள்ள பகுதிகளுக்கெல்லாம் இத்திட்டத்தை விரிவுபடுத்த அரசு திட்டமிட்டுள்ளது"

என்று உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன், இங்கு திட்டவட்டமாகத் தெரிவித்தார். அவர் மேலும் கூறியதாவது:—

"குடும்பக் கார்டு செயலில் உள்ள எல்லாப் பகுதிகளுக்கும் 1968 சனவரிக்குள் இத்திட்டத்தை விரிவுபடுத்த அரசு முதலில் எண்ணியிருந்தது; நான் அண்மையில் மதுரைக்குச் சென்றிருந்தபோது அளித்த ஒரு பேட்டியில், 'பருவ மழை சரிவரப் பெய்யாதது போன்ற எதிர்பாராத காரணங்களால், குடும்பக் கார்டு முறை உள்ள எல்லாப் பகுதிகளிலும் படி அரிசித் திட்டத்தை விரிவுபடுத்துவது பல்வேறு கட்டங்களாகச் செய்யப்படும்' என்றுதான் சொன்னேன்; படி அரிசித் திட்டத்தையே மறுபரிசீலனை செய்யப் போவதாகக் கூறவில்லை."

தி. மு. க. மொழிக் கொள்கைக்கு ஈ. எம். எஸ். நம்பூதிரிபாடு ஆதரவு

'எல்லாத் தேசிய மொழிகளும் ஆட்சிமொழிகளாக வேண்டும்'

புதுடில்லி, டிச. 11—

"பல்வேறு மாநிலங்களுக்கிடையே தொடர்பு மொழியாக எது இருக்க வேண்டுமென்பது, சூழ்நிலையைப் பொறுத்த பிரச்சினையாகும்; வரலாற்றுப் போக்கின் முடிவுக்கு இதனை விட்டுவிட வேண்டும்.

"தங்கள்மீது இந்திக்காரர்கள் ஆதிக்கம் செலுத்த முனைவதாக இந்தி பேசாத பகுதி மக்கள் உணருகின்றனர்; காரணம், இதுவரையில், இந்தியாவின் தலைமையமைச்சர்களாக வந்தவர்கள் அனைவரும் இந்திக்காரர்களாகவே இருக்கின்றனர்!

"கல்கத்தா, பம்பாய், சென்னை போன்ற தொழில் வளமிக்க நகரங்களிலும்—இந்தியா முழுவதிலும் இந்தி பேசுகிறவர்கள் தான் பெரும் முதலாளிகளாக இருந்துவருகிருர்கள்!

"'இந்திதான் இந்தியாவின் ஆட்சிமொழி' என்று சொன்னதுதான் காந்தியார் செய்த மிகப் பெரிய தவருகும்! அதனல்தான், இந்தியை எப்படியும் திணித்துவிட, இந்திக்காரர்கள் முயலுகின்றனர்; ஆனல், இதை, இந்தி பேசாத பகுதி மக்கள் ஒருபோதும் அனுமதிக்கமாட்டார்கள்! இது, தமிழ்நாட்டுக்கு மட்டும் உரிய பிரச்சினையோ—தி. மு. கழகத்திற்கு மட்டுமே உரிய பிரச்சினையோ அன்று; இந்தி பேசாத பகுதி மக்கள் அனைவருக்கும் உள்ள பிரச்சினை; அவர்கள் ஒருபோதும் இந்தித் திணிப்பை ஏற்கமாட்டார்கள்!

"மோழிப் பிரச்சினையில் இந்திக்காரர்கள், மிகக் கடுமையாக நடந்துகொள்ள முயலுகின்றனர்; அவர்கள் நிலை அதுவானல், இந்தி பேசாத பகுதி மக்களும் அந்த நிலைக்குத்தான் வருவார்கள்!

"மொத்தத்தில், மொழிப் பிரச்சினை தீர ஒரே ஒரு வழிதான் இருக்கிறது; 'இந்தி மட்டுமே ஆட்சிமொழி' என்பதை மாற்றி, 'எல்லாத் தேசிய மொழிகளுமே ஆட்சிமொழி' என அறிவிக்க வேண்டும்; நாடாளுமன்றத்தில் எல்லா மொழிகளிலும் பேசுவதற்கு வாய்ப்பும் வசதியும் அளிக்கப்பட வேண்டும்; இது ஒன்றுதான், மொழிப் பிரச்சினையைத் தீர்க்க இயலும்."

—(கேரள சமாஜத்தின் 29-வது ஆண்டு விழாவில்)

அமைச்சர்

இரா. நெடுஞ்செழியன்

சுற்றுப்பயணம்

டிச. 12: காலை 8 மணி: திருவாரூர்; மாலை 4 மணி: பெரம்பலூர்—ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 4-15 மணி: துவக்கப் பள்ளி ஆசிரியர் சங்க வரவேற்பு; 5-15 மணி: சத்திரமனை பள்ளித் திறப்பு; 6-15 மணி: தேவையூர்; இரவு 7 மணி: பெரம்பலூர் பொதுக்கூட்டம்; இரவு 11 மணி: திருச்சி.

டிச. 13: மாலை 3 மணி: மேட்டுக்குண்டு—ஊராட்சிக் கட்டிடத் திறப்பு; 3-30 மணி: சென்னங்குடி — ஊராட்சிக் கட்டிடத் திறப்பு; 4 மணி: பொட்டலப்பட்டி — ஊராட்சிக் கட்டிடத் திறப்பு; 6 மணி: சாத்தூர்—வியாபாரிகள் சங்கக் கட்டிடத் திறப்பு; இரவு 8 மணி: சிவகாசி—பொதுக்கூட்டம்; 9 மணி: திருத்தங்கல் பொதுக்கூட்டம்; 11-45 மணி: குற்ருலம்.

ரோஜா
பாக்கு &
புகையிலை
REGD. NO. 118331 ROJA
N. V. K. M. & சன்ஸ், திண்டுக்கல்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை,13 அச்சிட்டு வெளியிடப்பெறுகிறது.)